செ.வெ.எண்:05 நாள்:03.01.2018

புத்திரிக்கை செய்தி

**சுத்தம் புத்தகம் தரும்**

**மாவட்ட அளவிலான தூய்மை பள்ளிகளுக்கான விருதுகள்**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி அவர்கள் தகவல்.**

--------

திருநெல்வேலி மாவட்டத்தில், 2018ம் ஆண்டில் பாளையங்கோட்டை வ.உ.சி மைதானத்தில் பிப்ரவரி மாதத்தில் புத்தக திருவிழா நடைபெறவுள்ளது. புத்தக திருவிழாவினை முன்னிட்டு, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அரசு/அரசு உதவி பெறும்/ தனியார் பள்ளிகளில் சுகாதார பராமரிப்பு மற்றும் மேலாண்மையில் சிறந்து விளங்கும் பள்ளிகளுக்கு ஒன்றிய அளவில் தேர்வு செய்யப்பட்டு, தூய்மைப்பள்ளி விருதும், பள்ளிகளின் நூலகங்களுக்கு புத்தகங்களும் பரிசாக வழங்கப்படவுள்ளது. இதற்கென ‘‘சுத்தம் புத்தகம் தரும்’’ என்ற தலைப்பில் பள்ளிகளிடையே போட்டி அறிவிக்கப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் பள்ளி கல்வித் துறை 21 ஒன்றியங்களாக செயல்பட்டு வருகிறது. 21 ஒன்றியங்களிலும் அரசு பள்ளிகள்/அரசு உதவி பெறும் பள்ளிகளில் தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆகியவைகளில் தலா ஒரு பள்ளி எனும் அடிப்படையில், ஒன்றியத்திற்கு 4 நான்கு பள்ளிகள் தேர்வு செய்யப்படும். தனியார்/சிபிஎஸ்சி பள்ளிகளில் தொடக்கபள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆகியவைகளில் சிறந்த ஒரு பள்ளி தேர்வு செய்யப்படும். மொத்தமாக திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு ஒன்றியத்திற்கு 5 பள்ளிகள் வீதம் 21 ஒன்றியங்களுக்கு 105 பள்ளிகள் தேர்வு செய்யப்படும்.

தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ.5,000/–ம், நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.7,000/–ம், உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.10,000/–ம், மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.12,000/–ம் மதிப்புள்ள நூல்கள் பரிசாக வழங்கப்படும். இப்போட்டியின் மூலம் பள்ளி நூலகங்களுக்கு சுமார் 10 இலட்சம் மதிப்புள்ள நூல்கள் கிடைக்கும்.

பள்ளிகள் 1. டெங்கு பாதிப்பில்லா பள்ளி சூழல், 2. குப்பைகளை மக்கும்/மக்கா குப்பைகள் என பிரித்தல், 3. தூய்மை பாரத இயக்கம் விழிப்புணர்வு செயல்பாடுகள், 4. கழிப்பறை பயன்பாடுகள், 5. பள்ளி வளாகத்தில் மரக்கன்று நடுதல் மற்றும் பராமரிப்புகள் ஆகிய அடிப்படையில் பள்ளிகளை கல்வித் துறை அலுவலர்கள் மூலம் 22.01.2018 முதல் 31.01.2018 வரை பள்ளிகள் மதிப்பீடு செய்யப்பட்டு, தேர்வு செய்யப்படும் பள்ளிகளுக்கு புத்தக திருவிழாவில் புத்தக பரிசு வழங்கப்படும்.

எனவே, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அரசு/அரசு உதவி பெறும்/ தனியார் பள்ளிகள் அனைத்து பள்ளிகளும் தங்களது பள்ளிகளின் சுகாதாரம் பராமரிப்பு மற்றும் மேலாண்மைகளில் சிறப்பாக கவனம் செலுத்தி, பரிசுகளை பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.